செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

பயிலரங்க எண்ணிக்கைகள்: 106 நாள்: 15.09.2025

# செம்மொழித் தமிழ் மின் நூலகம்

## நடத்தும்

## வழக்கொழிந்த செம்மொழித் தமிழ் இலக்கியச் சொற்களின் மீட்டுருவாக்கத்தில் செயற்கை நுண்ணறிவின் பங்களிப்பு

## " The Contribution of Artificial Intelligence in Reviving Obsolete Words from Classical Tamil Literature"

### பயிலரங்கம் - 25

(10.10.2025 - 12.10.2025)

### அறிவிப்பும் அழைப்பும்

ஒவ்வொரு மொழிக்கும் சொற்கள்தாம் உயிர்நாடியாக விளங்கி வருகின்றன. ஒரு மொழியிலுள்ள சொல்வளமே அம்மொழியை நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடியதாக மாற்றுகிறது. காலந்தோறும் தமிழ் தன்னைப் புதுப்பித்துக் கொள்வதற்கு அதன் சொல்வளமையும் ஒரு காரணமாக இருக்கிறது. ஆனால், காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களில் அதன் பல சொற்கள் வழக்கொழிந்துவிட்டன.

தமிழ்மொழி தனக்கே உரித்தான சொல் வளமையைக் கொண்டு தனித்து இயங்கும் ஆற்றல் கொண்டது. அதற்கு மேலும் வளம்சேர்க்க வழக்கொழிந்து போன சொற்களை மீட்டுருவாக்கம் செய்வதும் அதனைப் பேசுபொருளாக்குவதும் பொருண்மை மாறிப் பயன்படுத்தப்படும் சில சொற்களைச் சரியாக இனம் காண்பதும் இன்றியமையாததாகும். இதனைச் சிந்திக்கும் பொருட்டே இந்தப் பயிலரங்கம் நடத்தப்படுகிறது.

தற்காலப் பேச்சுவழக்கிலும் நவீனப் படைப்புகளிலும் பண்டைத் தமிழ்ச் சொற்கள் பயன்பாட்டில் இல்லாமல் வழக்கொழிந்து போயிருக்கின்றன. இந்நிலையில், வழக்கொழிந்த செம்மொழித் தமிழ் இலக்கியச் சொற்களைச் செயற்கை நுண்ணறிவு (AI) மேலாண்மையைப் பயன்படுத்தி மீட்டுருவாக்கம் செய்வது காலத்தின் தேவையாகும். இயற்கை மொழிச் செயலாக்கம் (NLP), இயந்திரக் கற்றல் முறைகள் (ML) வழியாகப் பழந்தமிழ் இலக்கியங்களைக் கணினிப் புள்ளிவிவரங்களாக மாற்றி, வழக்கொழிந்த சொற்களை உயிர்ப்பிக்கச் செய்வதும் பொருண்மை அறிந்து பயன்படுத்துவதும் ஆவணப்படுத்துவதும் இப்பயிலரங்கின் முக்கிய நோக்கங்களாகும்.

- செம்மொழித்தமிழ் இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுத் தற்போது வழக்கொழிந்த சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிதல்.
- வழக்கொழிந்த சொற்களுக்குப் பதிலாகப் பிறமொழிச் சொற்கள் பயன்பாட்டில் இருந்தால் அச்சொற்களை நீக்கி அச்சொற்களுக்கு இணையாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துதல்; கலைச்சொல்லாக்கப் பணிகளுக்கு உதவியாக இச்சொற்களை வழங்குதல்.
- பொருண்மை மாறிப் பயன்படுத்தப்படும் சொற்களின் சரியான பொருண்மையினை அறிந்து பயன்படுத்துதல்.
- செயற்கை நுண்ணறிவு, சமூக ஊடகங்கள் முதலிய தளங்களில் இச்சொற்களைப் பதிவிடுவதன் மூலமாகப் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல்.
- இன்றைய ஆய்வாளர்களைச் செம்மொழித் தமிழ் இலக்கிய ஆய்வில் ஈடுபட வைத்து அவ்விலக்கியத்தில் உள்ள வழக்குச் சொற்களை அடையாளம் கண்டறிந்து முறைப்படுத்திச் சொற்களஞ்சியம் தயாரித்தல்.
- செயற்கை நுண்ணறிவு உலகில் செம்மொழித் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவது மட்டுமின்றி உள்ளீட்டுப் பொறியியலில் (PROMPT ENGINEERING) சவாலாக உள்ள இலக்கியச் சொற்களுக்கு விளக்கமளித்து

விடைகாண்பதற்கும் நுண்ணறிவுமிக்க விவாதங்கள், நேரடிப் பயிற்சி ஆகியவற்றின் மூலம் தீர்வைப் பெறுவதற்கும் இப்பயிலரங்கம் உதவும்.

கல்வி நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகளில் பணியாற்றும் **தமிழ்ப் பேராசிரியர்களையும் முழுநேர முனைவர்பட்ட ஆய்வு மாணவர்களையும்** இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 50
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 10.10.2025 **முதல்** 12.10.2025 **வரை 3 நாட்கள்.**
- பயிலரங்கு நேரம்: **காலை 10.00 - 1.00 வரை, பிற்பகல் 02.00 - 5.00** வரை
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்வோர் **மடிக்கணினியோடு வருதல் நன்று.**
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/xyVGSQrMWiUduMPC9 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 29.09.2025. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- ❖ விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 30.09.2025 அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- ❖ இப்பயிலரங்கில் பங்கேற்போர் 10 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- ❖ பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

இயக்குநர்